**செய்தி வெளியீடு எண் : 1363** **நாள் : 04.09.2024**

**நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலம் கன்னியமாகுமரி மாவட்டத்தில் நடைப்பெற்று வரும் பணிகளை மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் களஆய்வு மேற்கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில், நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலம் நடைப்பெற்று வரும் பணிகள் குறித்து, இன்று (04.09.2024) மாண்புமிகு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், களஆய்வு மேற்கொண்டார்.

கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளை, கோழிவிளை மங்காடு சாலையை, 8 கிலோ மீட்டர் நீளத்திற்கு நெடுஞ்சாலைத்துறை மூலம் சாலை விரிவாக்கம் செய்ய பொது மக்களால் கோரிக்கை அளிக்கப்பட்டது. இச்சாலையில் போக்குவரத்துச் செறிவு, சாலையின் அகலம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

மார்த்தாண்டம், பம்மம் பகுதியில் உள்ள பாலத்தின் உறுதி தன்மையை ஆய்வு செய்தார்கள். பாலத்தில் இருபுறமும் அணுகு சாலை குறுகலாக உள்ளதால் தேவையான அகலத்திற்கு நிலஎடுப்பு மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

மேலும், மழைக்காலத்திற்கு முன்னதாக அனைத்து பாலங்களையும், நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

இரனியல் சந்திப்பில், 1 கிலோ மீட்டர் நீளமுள்ள மண்டே மார்க்கெட் சாலை, குறுகிய சாலையாக உள்ளதால், விரிவாக்கம் செய்ய நிலஎடுப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நிலஎடுப்பில் காலதாமதம் மற்றும் நிலஎடுப்பில் உள்ள பல்வேறு இடையூறுகளை எப்படி தீர்வு காண வேண்டும் என்பது குறித்தும் தக்க அறிவுரைகள் வழங்கினார்கள்.

நெடுஞ்சாலைத்துறை மூலமாக நடைப்பெற்று வரும் சாலை விரிவாக்கப் பணிகளை ஆய்வு செய்த பின்னர், அய்யன் திருவள்ளுவர் சிலை, சுவாமி விவேகானந்தர் பாறைகளுக்குச் சென்று அங்கு நடைப்பெற்று வரும் பணிகளை களஆய்வு செய்தார்.

சுவாமி விவேகானந்தர் கன்னியாகுமரிக்கு வந்திருந்தபோது, கடலுக்குள் அமைந்திருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று, மூன்று நாட்கள் தியானம் செய்திருக்கின்றார்.

அவரது நினைவாக இந்தப் பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் ஒன்று கட்டப்பட்டு 1972 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இதனருகில் மற்றொரு பாறையில் உலகின் மிக உயரமான அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

1990 செப்டம்பர் 6 ஆம் நாள் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். ரூ.6.14 கோடி மதிப்பீட்டில்,

மொத்தம் 3,681 கற்கள் பயன்படுத்தி, 133 அடி உயரம் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டது.

2000 ஜனவரி 1ம் தேதி அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிலையைத் திறந்து வைத்தார்.

தற்போது, பொதுப்பணித்துறையின் மூலம் கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறையில் இரண்டு படகு நிற்கும் இறங்கு தள விரிவாக்கப் பணிகள் ரூ.33 கோடியில் நடைப்பெற்று வருவதை களஆய்வு செய்து, இப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும். இனி காலதாமதம் ஏற்படாமல் அலுவலர்கள் அவ்வப்போது களஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து, அய்யன் திருவள்ளுவர் சிலை, விவேகானந்தர் நினைவுப் பாறை ஆகியவற்றை இணைக்கும் "ஸ்டென்லெஸ் ஸ்டீல்" மூலமாக காண்பவர்களை கவர்ந்திடும் வகையில் ரூ.37 கோடி மதிப்பீட்டில் கண்ணாடி பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பாலத்தின் பணிகளை களஆய்வு செய்து, இப்பணிகளை வரும் டிசம்பர் 2024க்குள் முடிக்க வேண்டும் என்றும், இனிமேலும் காலதாமதம் செய்யாமல் விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.த.மனோ தங்கராஜ் அவர்கள், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜே.பிரின்ஸ், கிள்ளியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.ராஜேஷ்குமார், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திருமதி தாரகை கத்பெர்ட், நாகர்கோயில் மேயர் திரு.மகேஷ் பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா இ.ஆ.ப., நெடுஞ்சாலைத்துறை அரசு செயலாளர் முனைவர் திரு.ஆர்.செல்வராஜ் இ.ஆ.ப., கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா இ.ஆ.ப., முதன்மைத் தலைமைப் பொறியாளர் திரு.கே.பி.சத்தியமூர்த்தி, சிறப்பு அலுவலர்(டெக்னிக்கல்) திரு.இரா.சந்திரசேகர், சிறப்புப் பணி அலுவலர் திரு.இரா.விஸ்வநாத், மாநில துறைமுக அலுவலர் திரு.அன்பரசன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu